பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 05 செவ்வாய்க்கிழமை (19-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 190

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2052)

அரசாங்கத்தைக் கவிழ்க்க

ஐ.தே. கட்சி மும்முனையில் வியூகம்

முறியடிக்க பொ.ஐ.மு. இன்று கூடும்!

அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்புவிசேடநிருபர்)

★ பிரதமநீதியரசர் சரத்.என்.சில்வா மீதான குற்றவியல் பிரேரணை தொடர்பான சபாநாயகரின் தீர்ப்பு,

★ மாவனல்லை சம்பவத்தின் சூத்திரதாரி எனக் கருதப்படும் அமைச்சர் மஹிபால ஹேரத்திற்கெதிரான நம்பிக்கைஇல்லாத் தீர்மானம்,

★ ஒட்டுமொத்தமாகபொதுஜனஐக்கியமுன்னணிஅரசுமீதானநம்பிக்கை இல்லாத் தீர்மானம்,ஆகியவற்றின் மூலம்அரசைக் கவிழ்க்கும் ஐ.தே-கட்சியில் தீவிரமுயற்சிகள் என்றுமில்லாதவாறு அரசை ஆட்டம்காண வைத்துள்ளதாக கொழும்பு அரசியல்வட்டாரங் களில் பரவலாகப் பேசப்படுகிறது.

ஐக்கியதேசியக்கட்சியினால் பாராளு மன்றத்தில் கொண் டுவரப்பட வுள்ள மூன்று நம்பிக்கையில்லாத்தீர்மானத் தில் அமைச்சர் மஹிபாலஹே ரத்மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப் படு மாயின் ஏனையஇருநம்பிக்கை யில்லாத் தீர்மானங்களிலும் நிட்சயம் அரசு தோற்கடிக்கப் படும் என அரசியல் ஆய்வா ளர்கள் ஆரூடம் தெரிவித்துள் ளனர்.

அரசியல் ஆய்வாளர்களின்

(8-ம் பக்கம் பார்க்க)

தமிழ் இளைஞர்கள் மீது லண்டனில் தாக்குதல்

ஒருவர் பலி, நால்வர்காயம்

(லண்டன்)

லண்டன் அல்ஹட்டான் ஈலிங் வீதிப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணிய ளவில் ஐந்து தமிழ் இளைஞர் கள் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏனைய நால்வரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் லண்டன் கிறின்வோட் பகுதியில்வசித்து வந்த அரவிந்தன் முத்துக்கு மாரசாமி (வயது 25) என்ற தமிழ் இளைஞரே உயிரிழந்த வராவார்.

காரொன்றில் இருந்து மேற் படி இளைஞர்கள மீது மற் றொரு காரில் வந்த இனந் தெரியாத குழுவொன்று தாக்

(8-ம் பக்கம் பார்க்க)

ஜானக பெரேராவுக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் ஆர்ப்பாட்டம்

(சிட்னி)

அவுஸ் ரேலியாவுக் கான இலங்கைத் தூதுவராகமேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப் பட்டதை ஆட்சே பித்தும்,அவரை அவுஸ்ரேலிய அரசாங்கம் இலங்கைத் தூது வராக அங்கிகரிக்கக் கூடா தெனக் கோரியும், நேற்றுக் காலை அவுஸ்ரேலிய பாராளு மன்றத்திற்கு முன்னால் இலங் கைத்தமிழர்கள் ஆர்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் வடக்கு கிழக் குப் போர்ப்பகுதிகளில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் களில் குற்றம் சுமர்த்தப் பட்

(8-ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம்களின் எதிரி முஸ்லிம் காங்கிரசே

அமைச்சர் பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எ தி ரி ஸ்ரீ லங்கா மு ஸ் லி ம் காங்கிரசே யன்றி வே று யா ரு ம ல் ல என்று, போக்குவரத்துநெடும் சாலைகள் அமைச்சர் ஏ.எச். எம். பௌசி தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் முஸ்லிம் மக்களுக்கு சேவையாற்றவென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கியவர்கள் இன்றுஅம் மக்களுக்குஎதிராக செயற்படு வது வேதனையளிக்கிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.மாநகர சபை தொழிலாளர் வேலைநிறுத்தம் நேற்றுடன் முடிந்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர் களின் வேலை நிறுத்தப் போ ராட்டம் நேற்று மாலை முடி வுக்குக் கொண்டுவர ப் ப ட் டது.

கடந்த இரு தினங்களாக மேற்கொள்ளப்பட்ட இவ் வேலை நிறுத்தப் போராட் டத்தை முடிவுக்குக்கொண்டு வரும் முயற்சியில் யாழ். மாநகரசபையின் பிரதி முதல் வர் கந்தையன், மாநகரசபை உறுப்பினர்களான த.சுபத் திரன், தவநாதன், கனகரெத் தினம், மங்களநேசன், மோ ஸஸ் எட்வேட், மாநகரசபை யின் பதில் ஆணையா ளர்

(8-ம் பக்கம் பார்க்க)

எலும்புக்கூடு மீட்பு

(வவுனியா)

கிளிநொச்சி பரந்தன் ஓவசியர் சந்திக்கருகில் உள்ள கிணறொன்றிலிருந்து மனித மண்டையோடொன்றும், எலும்புகளும் மீட்கப்பட்டுள் ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி கிணற்றை துப்புரவு செய்யும் போதே இவை மீட் கப்பட்டுள்ளன. (இ)

ஹக்கீம் பேரியல் விவகாரம்

காத்தான்குடி - அம்பாறையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு காத்தான் குடி மற்றும்.அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங் களில் நேற்று முஸ்லிம் சமுகத் தவர்களால் பூணர் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அம்பாறையில் முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக் கீமின் பிரார்த்தனை இயக் கத்துக்கு ஆதரவு தெரிவித் தும்.

காத்தான் குடியில் முஸ்லிம் காங்கிரசின் அரசியல் அதியு யர் பீடத்தில் அமைச்சர் திருமதிபேரியல்அஸ்ரப்பையும் முன்னாள் பிரதிபமைச்சர் எம்.எல் ஏ.எம்ஹிஸ்புல்லா

(8-ம் பக்கம் பார்க்க)

சர்வமதக் குழுவினர் நேற்று யாழ். வந்தனர்

(யாழ். விசேட நிருபர்)

யாழ். குடாநாட்டின் தற் போதைய நிலையை நேரில் கண்டுகொள்வதற்காகமூன்று நாள் விஜயமொன்றை மேற் கொண்டு சர்வமத சமாதா னக்குழுவினர் நேற்று யாழ்ப் பாணம் வந்து சேர்ந்துள்ள னர்.

பேராசிரியர் கும்புறுகமுவே வஜிததேரர் தலைமையில் வடடினாபறை சோமானந்த தேரர், தம்மாலோக தேரர், சிவஸ்ரீ.குகானந்தக்குருக்கள், வணபிதா அந்தணசிறில், மௌலவி பி.எ.எஸ்.சப்யான் உட்பட 14மதத் தலைவர் களும், 6பத்திரிகையாளர் களும் விமான மூலம் பலாலி வந்தடைந்தனர். இவர்களை யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் அழைத்து வந்தார்.

நோர்வேயின் சமாதான

(8ம் பக்கம் பார்க்க)

பிரபாகரனுடன் பேசுவதற்கு அஸ்கிரியபீடாதிபதிவன்னிசெல்வார்!

முன்னாள்எம்.பி பண்டாரநாயக்கதெரிவிப்பு

[கொழும்பு]

இலங்கையின் இனப்பிரச் சினைக்குத் தீர்வுகாணவேண் டுமானால் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்கா, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் விடு தலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகிய மூவ ரும் நேரடிப் பேச்சுவார்த் தையில் ஈடுபடவேண்டும்.

இவ்வாறு மூன்னாள் சுதந் திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.பண்டார நாயக்க நேற்று முன்தினம் மறைந்த பத்திரிகையாளர் பாரதிநேசன் சின்னத்தம்பி யின் நினைவஞ்சலிக் கூட்டத் தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்; விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகர னுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அஸ்கிரிய பீடாதிபதியையும் அழைத் துக் கொண்டு வன்னி செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிவித்துள் ளார். (இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

தியாகிகள் தினம்

19

★

யூன்

★

2001



சக்திவாய்ந்த ஒரு தலைமைத் தோழரை இழந்துவிட்டோம். இந்த இழப்பு பிரமாண்டமானது. சோகம் தாங்கிக் கொள்ள முடியாதது. ஆனால், நாங்கள் எங்களது எதிர்காலக் கடமைகள் குறித்து தெளிவாக உள்ளோம். கடக்கவேண்டிய தூரம் இன்னும் நீண்டதாகவே உள்ளது.

எதிலும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாது செயற்படுபவர் தோழர் பத்மநாபா. எல்லாவற்றிலும் மனித நேயம் என்பதையே முதன்மைப்படுத்தினார். ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் சார்பிலிருந்தே ஒவ்வொன்றையும் சிந்தித்தார். அடக்கமாய் ஒரு மாணவன் போன்று எல்லோர் சொல்வதையும் கேட்டுக்கொள்வார். அரவணைத்தே திருத்துவார். பழகும் பண்பினால் அனைவரையும் வென்றுவிடுவார். எதிரிகளையும் வெல்லவேண்டுமே தவிர அழிப்பது நம் நோக்கமில்லை என்பார். அவரது பொது வாழ்க்கை சேவைகள் துணிச்சலானவை. அவர் மிகச் சிறந்த மக்கள் பக்தர். தனது வாழ்க்கையால் நமக்குப் பாடம் சொன்னவர். மக்களை நேசித்த மக்களால் நேசிக்கப்பட்ட ஒரு உன்னத மனிதர் கொல்லப்பட்டு விட்டது எமது கட்சிக்கும் தேசத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு. அந்த மனிதாபிமானம் மிக்க தலைவரை குண்டுகள் துளைத்த அந்த மாலைப் பொழுதை மறக்கவோ, மன்னிக்கவோ முடியாது. அவரது உடலோடு அவரது இலட்சியம், சிறப்புக்கள் அழிந்துவிட வில்லை. அழிந்துவிடாது. தோழர் பத்மநாபாவின் பெயர் அவரது பெருமை நீடித்து நிலவும். அவரது இலட்சியம் நிறைவேற்றப்படும்.

எப்போதும் தமிழர் இயக்கங்கள், கட்சிகள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் மத்தியில் ஐக்கியத்தையும், கூட்டுச் செயற்பாட்டினையும் வலியுறுத்திவந்தவரும், அதற்காக அயராது உழைத்தவரும், அதற்குச் செயல்வடிவம் தந்தவரும் உட்கட்சி ஜனநாயகத்தை நடைமுறையில் கடைப்பிடித்து முன்னுதாரணபுருஷராக திகழ்ந்தவருமான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலர் நாயகமான தோழர் ச. பத்மநாபா அவர்களின் நினைவு தினத்தில் உயிர்நீத்த எமது கட்சித் தோழர்கள், சக இயக்கப் போராளிகள், பொது மக்கள் அனைவரையும் நினைவு கூறுவது சாலப் பொருத்தமானதென்று கருதுகிறோம்.

இற்றைவரை அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், போராளிகள், பொது மக்கள் என எண்ணற்ற தியாகிகள் மக்களின் நலன்களுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். மக்களின் தேவைக்குப் பொருந்தாத எந்தக் கருத்தையும் வழிமுறையையும் உதறித்தள்ளி, உத்வேகத்துடன் மக்களின் நலன்களுக்காக உழைப்பதே நாம் அவர்களுக்குச் செய்யும் தக்க மரியாதையாகும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ.பி.ஆர்.எல்.எவ்]

யாழ். பிராந்திய அலுவலகம் 310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(3262)

இணக்கப்பாடு எதுவுமின்றி சுத்திகரிப்பு தொழிலாளர் போராட்டம் தொடர்கிறது

கழிவுநீர் வாய்க்கால்களில் இருந்து சகிக்க முடியா துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சுத்திகரிப்பு த்தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுமூன்றாவதுநாளாகவும் தொடர்ந்த நிலையில், கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் ஏற்படாத விடத்து இன்றும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.மாநகர சபை முன்றலில் நடைபெற்று வரும் இப் போராட்டத்தில் பெண் ஊழியர்கள் உட்பட 250இற்கும மேற்பட்டவர்கள் பங்கு பற்றி தமது கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர்.

இப் போராட்டதினால் யாழ்.நகரப்பகுதி உட்பட சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் சேவைக்குட்பட்ட பகுதியில் மிகுந்தசுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

வீதிக்கு வீதி குப்பைகள் குவிக்கப்பட்டிருப்பதுடன், வீசும் காற்றின் வேகத்தினால் அவை நடுவீதியில் பரவுண்டு கிடக்கின்றன.

அத்துடன், கழிவுநீர் வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாமையினால் அவற்றிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுகின்றது.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் தமதுநிலைப்பாடு தொடர்பாக கருத்து கூறுகையில்;

தமது கோரிக்கை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கத் தவறுமிடத்து தமதுபோராட்டம் மேலும்விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, இப் போராட்டத்தினைச் சுமுகமாகத் தீர்த்துவைக்கும் பொருட்டு யாழ். மாநகர சபையின் உறுப்பினர்களின் கூட்டம் ஒன்று பதில் ஆணையாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் ஈ. பி. டி. பி., புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் பங்கு பற்றினர்.

இக்கூட்டத்தின் முடிவில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்பிரதிநிதிகளுடன் சந்திப்பு ஒன்று இடம் பெற்றபோதும் இணக்கப்பாடு எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை.

(உ-10)

கலை நிலா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற அரங்கில் எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு கலைநிலா நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சுவிஸ்சர்லாந்து தமிழ் விழாவில் கலந்துகொண்டு, நாடு திரும்பியுள்ள மூவரின் நடனங்களும், "ஏகலைவன்" நாடகமும் நடைபெறவுள்ளது;

(உ-3)

தியாகிகள் தினம் இன்று அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈ.பி ஆர் எல்.எவ் வரதர் அணியினர் இன்று அவ்அமைப்பின் தலைவர் பத்மநாபா உயிரிழந்ததைநினைவு கூரும், தியாகிகள் தினத்தை இன்று அனுஷ்டிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வை முன்னிட்டு இரத்ததானம், சிறுவர், முதியோர் இல்லங்களில்அன்னதானம் மற்றும் பாடசாலை உபகரணங்கள் பாவனைப் பொருட்கள் வழங்குதல்ஆகிய பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் ஈ.பி.ஆர் எல்.எவ் அமைப்பிலிருந்து உயிர்நீர்த்த போராளிகளின் பெற்றோர்களைக் கௌரவிக்கும்நிகழ்வும் யாழ். பிராந்தியஅலுவலகத்தில் நடைபெறுமென்றுயிராந்திய அமைப்பாளர் த.சுபத்திரன்தெரிவித்துள்ளார். (இ)

நிறுவுனர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய நிறுவுநர் தினம் எதிர் வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10-00 மணியளவில்உப அதிபர் திருமதி த. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்னைநாள் அதிபர் கா. கணேசதாசன் பிரம்மஸ்ரீ ச. சங்கராஜசர்மா, ஓய்வு பெற்ற நுசிரியை திருமதி ஞா. கந்தசாமி ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றவுள்ளனர்.

சுத்திகரிப்பு தொழிலாளர், மீன் வியாபாரிகள் மோதல்

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் கல்வியங்காட்டுச் சந்தையில் யாழ். மாநகரசபையின் சுத்திகரிப்பு ஊழியர்களுக்கும், மீன் வியாபாரிகளுக்கும் இடையே கைகலப்பு இடம் பெற்றதாக அறியப்படுகிறது.

யாழ் மாநகர சபையின் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக மேற்படி சந்தையில் மீன் கழிவுகள் சேர்ந்திருந்ததாகவும்,

இதனை மீன் வியாபாரிகள் அகற்ற முற்பட்ட வேளை, சுத்திகரிப்பு தொழிலாளர்கள் தடுத்த போது இருசாராருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியதாகவும் கூறப்படுகிறது

இருப்பினும், சந்தையில் நின்றவர்கள் இதனை முற்றவிடாதுதடுத்தும், இவ்விடயம் பொலிஸார் வரை சென்று விட்டதாகத்தெரிகிறது;

(உ-10)

நினைவு தினம்

(புலோலி)

தமிழ்த் தாத்தா தென்புலோலியூர் கந்தமுருகேசனாரின் 35 ஆவதுஆண்டு நினைவு தினம் அண்மையில் புலோலியில் கொண்டாடப்பட்டது;

மந்திகையில் உள்ள கந்தமுருகேசனார் சிலையடியில் இந் நினைவு தின நிகழ்வுகள் நடை பெற்றன.

நிகழ்வுகளுக்கு யாழ். மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் எஸ். கதிர்காமத் தம்பி தலைமை தாங்கினார்.

(உ-52)

பாடசாலை இயங்குகிறது

(துன்னாலை)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் நேற்று திங்கட்கிழமை முதல் நெல்லியடி திரு இருதயக்கல்லூரிக்கு முன்பாகவுள்ள "கொலிஜ் ஒவ் கொமேஸ்" தனியார் கல்வி நிறுவனத்தில் இயங்கி வருவதாகவும்,

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கே வகுப்புகள் ஆரம்பமாகியிருப்பதாகவும் மேற்படி பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்; (உ-41)

இராசி பலன்

19.6.2001

(ஆனி 5, செவ்வாய்)

திரயோதசி மு.இ 8.59 வரை
கார்த்திகை மு.இ 8.14 வரை
இராகுகாலம் 2.54- 4.24
நல்ல நேரம் 10.24- 11.54
சித்தாமிர்தம், பிரதோச விரதம், கார்த்திகை விரதம்.

மேடம்
வீண் வாக்கு வாதம், அரச நன்மை, பொருள் விரயம், மனக்கிலேசம்.

இடபம்
ஜனவசியம், நல்ல உணவு கிடைத்தல், கற்பனைமிகுதி, காரியம் கைகூடும்.

மிதுனம்
உஷ்ண வியாதி, சனயசுகக் குறைவு, சுபசெலவு, காரிய தாமதம்.

கடகம்
நினைத்த காரியம் கைகூடும், கௌரவம், நண்பர்கள் சந்திப்பு, தனலாபம்.

சிங்கம்
உத்தியோக நன்மை, இரக்கப்படுதல், முயற்சி ஜெயம், எதிர்பாராத நன்மை.

கன்னி
மனச்சஞ்சலம், கட்டுப்பாடு, ஆனறோர் ஆசி, வயிற்றுக் கோளாறு.

துலாம்
அமைதிக் குறைவு, வியாதி, உறவினர் எதிர்ப்பு, காரியத் தடங்கல்;

விருச்சிகம்
போசன சுகம், வாகன வசதி, தனவரவு, முயற்சி கைகூடும்.

தனுசு
தொழில் விருத்தி, சத்துரு ஜெயம், வியாதி குணமடைதல், காரிய நன்மை.

மகரம்
மதிப்புக் குறைவு, மனச்சஞ்சலம், அரச நன்மை, முயற்சி தாமதம்.

கும்பம்
அதிகாரம், தாய்வழிஉறவு, தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம்;

மீனம்
சகோதரர் உதவி, தனவரவு, பிரயாணம், வாக்கு மேன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

மனிதவள வங்கி

(கல்வயல்)

அரச கரும மொழித் திணைக்களம், அரச கரும மொழிகள் கொள்கையை செயற்படுத்தும் நோக்குடன் மனித வள வங்கியை நிறுவவுள்ளது.

இதில் குறிப்பிட்ட பதவிகளுக்கு படித்துவிட்டு வேலையற்று இருப்போர் பதிவு செய்துகொள்ள முடியும்:

மொழி பெயர்ப்பாளர்கள் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) மொழிப் போதனாசிரியர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் ஆகிய பதவிகளுக்கு 18 வயதுக்கு மேற்பட்டோர் பதிவு செய்துகொள்ளலாம்.

எழுதுவினைஞர்களும் (தமிழ் மொழி) பதிவு செய்யலாம் எனவும் எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கு கபொத (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பது போதுமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்போர் உரிய படிவத்தை இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அரச கரும மொழிகள் ஆணையாளர், 341/7 கோட்டே வீதி, ராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-111)

தமிழ்விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் தமிழ் விழா இன்று மு.ப 9.30 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் தலைவர் செல்வன் இ. வினோதராஜ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (உ)

ஆங்கில டிப்ளோமா பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர்தர தொழில்நுட்ப நிறுவன தேசிய ஆங்கில டிப்ளோமா 2 ஆம் வருடப் பரீட்சை 23, 25, 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நேரசூசி, மற்றும் பரீட்சை அனுமதி அட்டை ஆகியவற்றை பரீட்சார்த்திகள் நேரில் வந்து பெற்றுச் செல்லுமாறு நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார்; (உ)

கும்பாபிஷேகம்

(கல்வயல்)

இணுவில் கந்தசாமி கோவில் பஞ்சதள இராஜ கோபுரத்தின் 17 குண்ட மஹா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (உ-111)

கலந்துரையாடல்

(துன்னாலை)

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் அண்மையில் விவசாயிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்த ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில், கிராம மட்டத்தில் நிலவும் பிரச்சினைகள், திட்டமிடல் மற்றும் புனர்வாழ்வு, சமூக மாற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

(உ-41)

அடிப்படை வசதிகள் இல்லை

(மல்லாகம்)

சுன்னாகம் தெற்கு காந்தி ரூபன் சனசமூக நிலையத்தை அண்டி வாழும் மக்கள் மலசல கூடம், குடி நீர் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி பெரிதும் துன்பப்படுவதாகத் தெரியவருகிறது; (உ-122)

மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்; உயர்தொழில் நுட்ப நிறுவன (எச் என். டி. எ) கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி முதலாம் ஆண்டு மீள் பரீட்சை நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளதாக நிறுவன இயக்குநர் ரி. இராஜரட்ணம் அறிவித்துள்ளார்

(உ-6)

புதிய சம்பளம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு, சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் புதிய சம்பளத்திட்டத்தின்படி சம்பளம் வழங்குவதற்கான அங்கீகாரத்தை யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் வழங்கியுள்ளார்.

புதிய சம்பளம் வழங்கப்படுவதை அடுத்து இதுவரை காலமும் வழங்கப்பட்டுவந்த இடைக்காலப்படி 400/- இம் மாதம் முதல் நிறுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது; (வ)

உயர்தர

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைச் சொற்களை தேவைக்கேற்ப உருவாக்கும் ஒரு கூட்டம் நம்தமிழ் அறிஞரிடையே ஏற்படவேண்டும். ஆங்கில மொழியிலிருந்து தாய் மொழிப போதனைக்குவந்த போது டாக்டர் கிறீன் போன்ற தமிழ்ச் சான்றோர் செய்த பணிகள் இன்று நினைத்துப் பார்க்கப் படக் கூடியன.

பெருமக்கள்

G U போப்பையர், வீரமாமுனிவர், தாவீது அடிகள், கால்ட் வெல் போன்றவர்களோடு நம் ஞானப்பிரகாச சுவாமிகள், தனிநாயகம் அடிகள் போன்ற கிறிஸ்தவர்கள் ஆங்கிலப் பின்னணியில் ஆழ்ந்த அறிவுடையோராயிருந்துதமிழ் வளர ஆற்றிய பணிகள இன்றும் நினைக்கற்பாலன.

எட்டுத்திக்கும் சென்றிடுவீர் அங்குள்ள அறிவுச் செல்வங்களை இங்கு அள்ளிக் கொணர்ந்திடுவீர் என்று பாடிய பாரதி அறிவியலின் அர்த்தங்களை சொல்வதற்கு தமிழிற்கு ஆற்றல் இன்னும் வேண்டும் என்று அன்றேகூவினார்;

நம் தாய் மொழியில் நம் மாணவர்கள்கற்றுஅமமொழியில் சிந்திக்கிறார்களோஅதே மொழியில் ஆழக்கற்றலும் எளிது என்று உளவியலாளர்கள கூறிய பாங்கிலே சுய மொழியிலேயேதொடர்ந்தும் கற்க தமிழ் மொழி தன் உச்ச இயலுமையைக் காட்டவேண்டும். என்பதேஎமதுவேணவா. இல்லையெனில் மெல்லத் தமிழ் இனிச்சாகும் என்று புலவன் பாடிய நிலை உலக அரங்கில் தமிழ் மொழிக்கு வந்துவிடுமோ என அச்சம தோன்றுகிறது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட நம் தாய்மொழி, வண்மைத்தமிழ் அத்துணை ஆற்றல் குறைந்ததா; வறுமையுற்றதா எனஅறிஞர் உலகம் சிந்திக்கும்நாள் எப்போது வரும்.?

புலிகளின் தாக்குதல்களை

எதிர் கொள்வதற்கு வவுனியாவில் பாதுகாப்பு பலப்படுத்தப் படுகிறது

(வவுனியா)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதை அடுத்து இராணுவக் கட்டுப்பாட்டு வவுனியாப் பகுதி பலத்தபாது காப்புக்குட்படுத்தப்பட்டு வருவதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீதியில் போவோர் மீதான சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருவதுடன் சோதனைச்சாவடிகள், காவலரண்கள் பலப்படுத்தப்பட்டும், புதிதாக அமைக்கப்பட்டும் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்திலிருந்து வரும் இளைஞர், யுவதிகள் மற்றும் முதியோரும் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டபின்பே நகருக்குள் அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வவுனியா வீதிகளில் விசேட அதிரடிப் படையினர் சைக்கிள்களில் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். பிரதான வீதிகளில் உள்ள பாலங்களும் மதகுகளும் அதிகாலை வேளைகளில் சோதனை செய்யப்பட்டு வருகின்றன. (வ)

வடக்கு - கிழக்கில்

குடிசன மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறும்?

(கொழும்பு)

ஜூலை 17 இல் இலங்கை முழுவதிலும் நடைபெறவுள்ள குடிசன மதிப்பீடு யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியில் நடத்தப்படமாட்டாது என்று ஜனாதிபதி தம்மிடம் உறுதியளித்துள்ளதாக ஈ.பி.டி.பி. கட்சி தெரிவித்திருந்தாலும் அதனை வடபகுதியிலும் நடத்துவதற்கான முயற்சிகளை குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத் தலைவர் டபிள்யு. நாணயக்கார மேற்கொண்டுவருகிறார் எனவும்,

இதற்கென ஐ.நா. அகதிகளுக்கான ஸ்தாபனத்தை அவர் ஈடுபடுத்தியுள்ளார் எனவும்,

ஐ. நா. ஸ்தாபனமான யு. என். எச். சி. ஆர், விடுதலைப்புலிகளுடனும் ஏனைய தமிழ் கட்சிகளுடனும் பேசி அவற்றின் ஒத்துழைப்பைப் பெறும் முயற்சிகளை நடைபெற்று வருகின்றதாகவும் கூறப்படுகிறது. (உ)

வேகமாய் வந்த

லொறி மோதியதில் தாயும் மகனும் பலி

(கொழும்பு)

வேகமாக வந்த லொறி வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள் மீது மோதியதில் தாயும் மகனும் ஸ்தலத்தில் பலியாகினர்.

நேற்றுமுன்தினம் பி.ப 1.30 மணியளவில் கண்டியில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பவம் நிகழ்ந்த அடுத்த நிமிடம் லொறிச்சாரதி இருசடலங்களையும் எடுத்துக்கொண்டுபொலிஸில் சரணடைந்துள்ளார்.

வேகமாக வாகனத்தைச் செலுத்தியதுதவறு என்று தெரிவித்த சாரதி, அதற்காக நீதிமன்றம் எழங்கும் எந்தத் தண்டனையையும் தாம்ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

[உ-7]

ஆசிரியர் கலாசாலையிலும் அதிருப்தியான செயலா?

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பகிடிவதை என்னும் கொடிய செயல் ஆங்காங்கே இடம் பெற்று வருவதாகத் தெரிய வந்துள்ளது.

புகுமுக மாணவர்கள் மீது மூத்த மாணவர்கள் மேற்கொண்டு வரும் இந்தஅடாத செயல் குறித்து,

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஒருபகுதியில் இயங்கி வரும் யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டு வருவதாகவும்,

பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டே, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவான சிலமாணவர்களே இப்பகிடிவதை நடவடிக்கையில் பெரும்பாலும் ஈடுபட்டு வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்காலத்தில் மாணவர்களுக்கு நல்லறிவைப் புகட்ட வேண்டிய ஆசிரியர் குழாம், இவ்வாறு அடாத செயல்களில் ஈடுபட்டு வருவது குறித்துபலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தற்போது விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பலாலி ஆசிரியர் கலாசாலை நிர்வாகமும் இதனை முன்கூட்டியே கவனத்திற்குஎடுக்க வேண்டுமென அக்கறையுள்ள தமிழ்ச்சமூகம் கேட்டுள்ளது. (உ-9)

யாப்பு திருத்தம்

(வவுனியா)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாப்பு திருத்துவது தொடர்பாக வடக்கு-கிழக்கு செஞ்சிலுவைச் சங்க தலைவர்கள், செயலாளர்கள் திருமலை ஹபரணையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் கூடி ஆராய்ந்து வருகின்றனர்.

யாப்புத் திருத்தும் குழுவினால் முன்னாள் யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தலைமையில் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. (வ)

மைதானம் இல்லை

(மல்லாகம்)

ஆனைப்பந்தி மெ.மி. த.க. பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இன்மையால், மாணவர்களது விளையாட்டு நிகழ்வுகளை பாடசாலை வளவிலுள்ள குறுகிய இடத்திலேயே நடத்த வேண்டிய நிலை காணப்படுகிறது. (உ-122)

மணிவாசகர் குருபூசை

[யாழ்ப்பாணம்]

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய இந்து மாணவ மன்றத்தின் சார்பில் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை அதிபர் ச. சர்வேஸ்வரன் தலைமையில் மணிவாசகர் குருபூசை சிறப்பாக நடைபெறவுள்ளது.

சமூக ஜோதி கா. கணேசதாசன் விழாவில் கலந்து "திருவாசகத்தேன்" என்னும் விடயம் பற்றி உரையாற்றவுள்ளார். (உ)

வைத்திய அதிகாரி அறிவிப்பு

வேலணைகால்நடை வைத்தியசாலையில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை, விடுமுறை தவிர்ந்த ஏனைய தினங்களில் இடம் பெறுவதாகவும்,

கால்நடை உரிமையாளர்கள் வேலணை வைத்தியசாலையில் மு.ப 11 00மணிக்கு முன்பதாகப்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (உ)

வசதிகளை அதிகரிக்குக

[செம்பியன்பற்று]

மணற்காட்டுப் பகுதியில் வைத்தியவசதி, தொடர்பாடல் வசதி என்பவற்றை ஏற்படுத்தக்கோரி பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரால், மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி மற்றும், மாவட்டத்தபால்அதிபர் ஆகியோர்க்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-42)

பிரதேச செயலக நடமாடும் சேவை

[மானிப்பாய்]

சண்டிலிப்பாய் பிரதேச செயலக நடமாடும் சேவை இன்று நவாலி சென் பீற்றர் றோ. க. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ-120)

முடிவு திகதி நீடிப்பு

(கல்வயல்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி ஆலோசகர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை விண்ணப்ப முடிவு திகதியை இம்மாதம் 21 ஆம் திகதிவரை நீடித்திருப்பதாக வர்த்தமானி மூலம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஜே. நவரத்ன அறிவித்துள்ளார். (உ-111)

நிவாரணம் வழங்கல்

(துன்னாலை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மேமாதத்திற்கான நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகவும் அதற்கான உத்தரவுப் பத்திரத்தினை அப்பகுதி கிராம அலுவலர்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளுமாறும் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தெரிவித்துள்ளார். (உ-41)

வடமராட்சி கிழக்கு

அபி. தொண்டர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பம்

(புலோலி)

வடமராட்சி கிழக்கு அபிவிருத்தித் தொண்டர்களுக்கு தையல் இயந்திரம், அலுவலக, வீட்டுத்தளபாடங்கள், விவசாய உபகரணங்கள் ஆகியவற்றைப் பழுது பார்த்தல் பற்றிய பயிற்சி நெறிகள் வெகுவிரைவில் பருத்தித்துறையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிகளில் 40 அபிவிருத்தித் தொண்டர் பங்குபற்றவுள்ளனர்.

அபிவிருத்தித் தொண்டர்களுக்கு பனைவள கைத்தொழில், மீன்பிடி வலை தயாரித்தலும் திருத்தலும், கடலுணவு பதனிடுதல் பற்றிய பயிற்சிகள் ஏற்கெனவே அப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பயிற்சிகளில் 60 அபிவிருத்தித் தொண்டர்கள் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகப் பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களுக்கான செயற்பாட்டுத் திட்டங்கள் பற்றிய கூட்டமொன்று புலோலி பொது நூல் நிலையத்தில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (உ-52)

439 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

(கல்வயல்)

வடக்கு-கிழக்கு மாகாண சபை கடந்த ஆண்டில் 439 வேலையற்ற பட்டதாரிகளுக்குவேலைவாய்ப்பை வழங்கியுள்ளது.

இந்த வகையில் அபிவிருத்தி உதவியாளர்களாக 25பேரும் கருத்திட்ட உத்தியோகத்தர்களாக 31பேரும், வைத்தியதர உத்தியோகத்தர்களாக 5பேரும், உள்ளூராட்சி நிறுவன உதவியாளர்களாக 56பேரும் முகாமைத்துவ உதவியாளர்களாக 322 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிடபட்டதாரிப்பயிலுனர்கள், சமூக அபிவிருத்திஉத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகிய பதவிகளை வகித்த 43 பேர் நிரந்தரமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-111)

பயணிகளிடம் திருடியவர் வசமாக மாட்டுப்பட்டார்

(துன்னாலை)

கடந்த சனிக்கிழமை காலை பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த 751 ஆம் இலக்க சிற்றூர்தியில் இடம் பெற்ற திருடுச் செயல் பயணிகளின் சாதுரியத்தால் முறியடிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது பயணிகளுடன் பயணியாக இருந்த ஒருவர், அங்கிருந்த இன்னொருவரின் பொக்கற்றில் இருந்து பணம் அடங்கிய பையைத் திருடியதுடன், அருகிருந்த பெண் மணியின் தங்கச் சங்கிலியையும் அபகரித்துக் கொண்டு யாழ்நகர் வின்சர் தியேட்டர் சந்தியில் இறங்க முற்பட்ட போது,

மற்றைய பயணிகள் மடக்கிப் பிடித்து திருட்டுப் பொருட்களை மீட்டெடுத்தனர். (உ-41)

யாழ். விஞ்ஞானச் சங்க

சமூக விஞ்ஞானப் பிரிவின் இரண்டாவது கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின சமூக வஞ்ஞானப் பிரிவு நடத்தும் கருததரங்குத் தொடரின், இரண்டாவது கருத்தரங்கு 21 ஆம் திகதி எதிர்வரும் வியாழக்கிழமை பி. ப.3 00 மணிக்குபுவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். விஞ்ஞானச்சங்க சமூக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் வரலாற்றுத்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பரமு புஷ்பரட்ணம் 'ஈழத் தமிழர் வரலாற்றில் தமிழ் அரச உருவாக்கம்' எனும் தலைப்பில்கருத்துரை வழங்கவுள்ளார்.

இக் கருத்தரங்கில் ஆர்வமுள்ளோர் எவரும் கலந்து கொள்ளலாமென நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

சுவிற்ஸர்லாந்து சென்ற

திருமறைக் கலாமன்ற கலைஞர் நாடு திரும்பினர்

(ஈச்சமோட்டை)

திருமறைக்கலா மன்றத்தின் சர்வதேச கிளைகள் இணைந்து சுவிஸில் நடாத்திய தமிழ் விழாவில் பங்குபற்றிய இலங்கைக் கலைஞர்கள் அண்மையில் நாடுதிரும்பியுள்ளனர்.

ஜூன் 9, 10 ஆம் திகதிகளில் பேண் மாநகரில் திருமறைக்கலா மன்றத்தின் சர்வதேச கிளைகள் யாவும் இணைந்து பெரும் எடுப்பில் தமிழ்விழாவை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதில் நாடகங்கள், நாட்டியங்கள், கருத்துரைகள், நாட்டுக் கூத்துக்கள் பாடல்கள், கவிதைகள் என எமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும்நிகழ்வுகள்இடம்பெற்றதாகவும் பல்லாயிரக்கணக்கான புலம் பெயர்ந்தமக்களும் அந்நாட்டு ரசிகர்களும் இத்தமிழ் விழாவில் கலந்து கொண்டதாகவும் அங்கு சென்றுவந்த கலைஞர்கள் தெரிவித்தனர். (உ-59

இன்று ஒரு தகவல்

நீதி வழுவாத அரசன்

சிலகாலத்திற்கு முன படை வீரர்களுள் ஒருவன் உழவன் ஒருவனுடைய வீட்டிற்குள் நுழைந்து வலுக்கட்டாயமாக அங்கிருந்த வேலைக்காரியைக் கட்டிப் பிடித்துக் கெடுக்க முயன்றான். உழவன் அரசனிடத்தில் முறையிட்டான் அரசன் உழவனை நோக்கி ''அத்தீயவன் மறுபடியும் உன் வீட்டுக்கு எப்போது வருகிறானோ அந்தக் கணமே எனக்குத் தெரிவி'' என்றான்.

அவ்வாறே மறுநாள் இரவு அந்தப் படைவீரன் தன் வீட்டிற்கு வந்திருந்த சமயத்தில் அந்த உழவன் அரசனிடம் தெரிவித்தான். உடனே அரசன் கத்தியை ஓங்கிக் கொண்டு அந்த வீடிற்குள் நுழைந்தான். முதலில் விளக்கை அணைத்து விட்டு அத்தீயவனைக் கொன்றான். பிறகு மறுபடியும் விளக்குக் கொண்டு வரச் சொன்னான். கொல்லப்பட்டவனுடைய முகத்தை உற்றுப் பார்த்தான். உடனே கடவுளுக்கு வணக்கம் செய்தான்.

பிறகு அரசன் அந்த வீட்டுக்காரனைப் பார்த்து, ''ஏதேனும் சாப்பிட இருந்தால் கொண்டு வா'' என்றான். அவன் கொண்டு வந்த உணவை அரசன் விருப்பத்துடன் உண்டான். அரசனின் செயல்களைப் பார்த்து உழவன் வியப்பு அடைந்தான். அதன் காரணத்தைக் கூற வேண்டும் என அரசனிடம் மன்றாடினான். அதற்கு அரசன் இப்படிப்பட்ட தீய செய்கையை என் மகனைத் தவிர வேறுஒருவன் செய்யத் துணியமாட்டான் என்று நினைத்தேன்; அதனால் அவன் முகத்தைப் பார்த்தால், அவனைக் கொல்ல எனக்கு மனம் வராதென்று அஞ்சி, முதலில் விளக்கைஅணைத்துஅவனைப் பார்க்காமலேயே கொன்றேன். பிறகு விளக்கை ஏற்றி அவன் முகத்தைப் பார்த்த போது, என் மகன் இல்லையென்று தெரிந்து கடவுளுக்கு நன்றி செலுத்தினேன். முறை செய்ய வேண்டுமென்று நீ என்னிடம் வேண்டிய போது, அந்தக் குற்றவாளியை பிடித்துக் கொல்கிறவரையில் நான் சாப்பிடுவது இல்லையென்று உறுதி செய்து கொண்டு பட்டினியாக இருந்தபடியால் உன் வீட்டில் விருப்பத்துடன் காலம் அல்லாத காலத்திலும் உணவு உண்டேன்' என்றான்.

பேராசிரியர் எ. சோதி

நிரந்தர அமைதி ஏற்பட சர்வகட்சி மாநாட்டைக் கூட்ட வேண்டும்

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் ஏற்படுத்த சகல கட்சிகளையும் கூட்டி மாநாடு ஒன்றினை நடத்த வேண்டும்.

இவ்வாறு இலங்கை மக்கள் கட்சி தனது நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் வெளியிட்ட ஓர் அறிக்கை மூலம் அரசிடம கோரிக்கை விடுத்துள்ளது.

அக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் நவரத்தின விடுத்துள்ள அந்த அறிக்கையில்; ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்குவதாகவும், நாட்டில் சமாதானம்வேண்டி அடுத்த ஜூலை மாதம் கொழும்பிலிருந்து கதிர்காமம் வரை பாதயாத்திரை ஒன்றை மேற் கொள்ளவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

மலசல கூட வசதி

(மல்லாகம்)

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு ஜி.ரி சற் நிறுவனத்தினால் மலசல கூட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால் மேற்படி பாடசாலையில் இதுவரைகாலமும் நிலவிவந்த மலசல கூட பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. (உ-122)

அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பெரியவிளான், வலி தென்மேற்கு என்ற முகவரியைச் சேர்ந்த நாகேஸ்வரி தருமரத்தினம் என்பவரது தேசிய அடையாள அட்டை வழியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம் (உ)

கட்டாக்காலி கால்நடைகள் பெருக்கம்

(தென்மராட்சி)

தென்மராட்சியிலுள்ள மட்டுவில், கைதடி நுணாவில் மற்றும்சரசாலைப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான கால்நடைகள்கட்டாக்காலிகளாக அலைந்துதிரிகின்றன.

இக்கால்நடைகள் அங்கு வயல்களுக்கு மத்தியில் காணப்படும் குளங்களை அண்டிய பகுதிகளிலே தங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்; (உ-77)

இழப்பீட்டு படிவம் பெற ஏற்பாடு

(தென்மராட்சி)

சாவகச்சேரிகைத் தொழில் வணிகர் மன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருக்கும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தமது இழப்பீடு தொடர்பான பொலிஸ் அறிக்கையை இதுவரை பெறாவிடில் அதனை கைதடி பொலிஸ் நிலையத்தில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டினை மன்றத்தின் தலைவர் இரா. ஜெயபாலன் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-77)

சுற்றுமதில் அமைப்பு

(மல்லாகம்)

சுன்னாகம் தெற்கு சபாபதி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற வாழ்வகத்தின் கட்டடத்தைச் சுற்றி மதில் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

அத்துடன், இப் பகுதி சிரமதானமும் செய்யப்பட்டு, புதுமெருகு பெற்று வருகின்றதைக் காணக் கூடியதாகவுள்ளது; (உ-122)

படையினர் உதவியுடன் நகைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை கோவிலாக்கண்டி மத்தி சாவகச்சேரி என்ற முகவரியில் உள்ள வேலுப்பிள்ளை என்பவரது வீட்டுக்கு உரிமையாளருடன் சென்ற படையினர், அவர் வீட்டில் புதைத்து வைத்து விட்டுச் சென்ற தங்க ஆபரணங்களை மீட்டெடுத்து கொடுத்துள்ளனர்.

இவற்றில் தாலிக்கொடி தங்கமாலை, வளையல்கள், மோதிரங்கள், தோடுகள் என்பன அடங்கும்; (உ)

தென்னை, பனைமரங்கள் பெருமளவில் சேதம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள மட்டுவில் தெற்கு, மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம் ஆகிய பிரிவுகளில் பெரும் எண்ணிக்கையான பனை, தென்னை மற்றும் பயன் தரும் மரங்களான மா, பலா போன்றவை பெரும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

இதன்காரணமாக இப்பகுதிகளில் எதிர்காலத்தில் தென்னம் பொருட்கள் மற்றும் பனம் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவக்கூடிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன் பனை, தென்னை வளங்களை நம்பியுள்ள குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சியும் பெரிதும் பாதிப்படையக்கூடிய நிலை உருவாகியுள்ளதாகபனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்; (உ-77)

வவுனியாவில் மனிதஉரிமை இல்லம் அமைப்பு

(வவுனியா)

வவுனியாவில் மனிதஉரிமை இல்லம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மனித உரிமை இல்லம் வவுனியாவில்காணாமல் போனோர், கைதாவோர், மனித உரிமைமீறல்கள் தொடர்பாகதகவனம் செலுத்துவதுடன் இதற்கான இலவசக் சட்ட ஆலோசனைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு உதவவுள்ளது.

மனித உரிமை இல்லம் தொடர்பான விளக்கத்தை வவுனியாவில் உள்ள அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கு அளிப்பதற்கான இரண்டு கருத்தரங்குகளை வவுனியாவில் நடத்தவுள்ளனர் (வ)

சப்ரகமுவா பல்கலை நேற்று மூடப்பட்டது

சின்னம்மை நோய் காரணம்

(கொழும்பு)

சின்னம்மை நோய் காரணமாக சப்ரகமுவா மாகாணப் பல்கலைக்கழகம் நேற்று முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் வேகமாகப் பரவி வரும் சின்னம்மை நோயே இதற்குக் காரணம் எனப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ)

தொடரும் சில்லறைத்தட்டுப்பாடு நீக்க நடவடிக்கை இல்லை

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் சில்லறை நாணயங்களுக்கான தட்டுப்பாடு தொடர்கதையாகவே இருந்துவருகின்றது. சில்லறை நாணயங்களுக்கு நிலவி வரும் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமங்களை வர்த்தக நிலையங்களிலும், பேருந்துகளிலும், தபால் அலுவலகங்களிலும் எதிர்நோக்கிவருகின்றனர்.

இந்தநிலைமை காரணமாக பல இடங்களில் வாய்த்தர்க்கங்களும் இடம்பெற்று வருகின்றன எனவும் அறியப்படுகின்றது.

அத்துடன் சில சமயங்களில்சில்லறைநாணயங்களைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளாமலேயே செல்லவேண்டியும் ஏற்படுகின்றது.

நிலவுகின்ற சில்லறைத் தட்டுப்பாட்டினை நீக்குவதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் இதுவரையும் மேற்கொள்ளாமை குறித்து பொதுமக்கள் தரப்பில் பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

மாணிக்கக்கல் தோண்டிய திருட்டுக் கோஷ்டி பொலிஸாரிடம் சிக்கியது

கனவின் பலன் கைமேல் கிடைத்தது

[கொழும்பு]

இரவு நேரம் வீட்டிற்குள் புகுந்த திருடர் கோஷ்டி வீட்டாரை கட்டிவைத்துவிட்டு முற்றத்தில் மாணிக்கக் கல் தோண்டிக் கொண்டிருந்த போது பொலிஸாரிடம் வசமாகச் சிக்கிக் கொண்ட சம்பவம் மஹியங்கனைப் பகுதியில் நடைபெற்றுள்ளது

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; இவ் வீட்டுப் பெண்மணி சம்பவ தினத்திற்கு முதல்நாள் இரவு தமது வீட்டில் குறிப்பிட்ட இடத்தில்மாணிக்கக்கல்இருப்பதாகக் கனவு கண்டாராம்;

இதனையறிந்த திருடர் கோஷ்டியொன்றே இரவு வேளையில் உட்புகுந்து முற்றத்தை தோண்டியுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது; (செ)

ஊழியர் சேமலாப நிதிப்பத்திரத்தை சமர்ப்பித்து வீட்டுக்கடனை பெற்றுக் கொள்ள முடியும்

வீடமைப்பு அபிவிருத்தித்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மக்களும் தமது ஊழியர் சேமலாப நிதிப்பத்திரத்தை பிணையாக வைத்தால் அல்லது தொழில் அமைச்சு மூலம் அதற்குரிய சான்றிதழ்களை சமர்ப்பித்தால் அவர்களுக்குரிய வீட்டுக் கடனை இரு வாரங்களுக்குள் வழங்க முடியும் என வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுததாபன தலைவர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு-கிழக்கில் உள்ளவர்களின் காணி, வீடுகளின் உறுதிகள் தற்போதைய சூழ்நிலைகாரணமாக பெற்றுக் கொள்ள முடியாது உள்ளது;

இதனால் சேமலாப நிதிப் பத்திரத்தை சமர்ப்பித்து இரண்டு வாரங்களுள் வீட்டுக் கடனைப் பெற்றுக கொள்ள முடியும்.

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கும், பிரதேச செய்தியாளர்களுக்கும் குறைந்த பெறுமதியில் வீடுகளை வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (க)

மசகுஎண்ணெய் வளம் பற்றி ஆராய

அவுஸ்திரேலிய நிபுணர்குழு இலங்கை வருகை

[கொழும்பு]

இலங்கையில மசகு எண்ணெய் வளம் உள்ளதா என்பதைகண்டறிவதற்குஅவுஸ்ரேலியாவின்உதிதவ்யுடன் பூகற்பவியல் ஆய்வு மற்றும் கனிப்பொருள் பணியகம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது;

இப் பணியகம் பூகற்பவியல் வரைபடங்களைத் தயாரித்து அதனை அடிப்படையாக வைத்து செயற்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் மூலம் வேலைவாய்ப்புக்களை வழங்க முடியும் என இன விவகார தேசிய ஒருமைப்பாட்டு கனிப்பொருள் மூலவள அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்தார். [க-3]

வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ பூமிக்கு வரப்போகும் பொல்லாப்பு

சூரியனில் உள்ள சக்தி தீர்ந்து போனால் இந்தப் பூமி இருளில் மூழ்கிப் போகும் என்பது நாம் அறிந்த விடயம் தான். சூரியன் அணைந்து போவதால் இதனை விட வேறுபல கொடூரமான விளைவுகளையும் நாம் சந்திக்க வேண்டி வரும் என்று மிகப் பிரபல்யம் வாய்ந்த 'சயன்ஸ் டைஜஸ்ட்'' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது;

சூரியனில் உள்ள அணு ஆற்றல் தீர்ந்து விடத் தொடங்கும் போது அது தன்னுடைய தற்போதைய அளவை விட பல மடங்கு பெருக்கமடைவதுடன், பூமியின் வெப்ப நிலையும் பல நூறு டிகிரிக்கு உயர்வடையுமாம்.

இதனால் கடல் கொதித்து வளி மண்டலம் ஒரு நீராவி மேக உறையாக மாற்றமடையும்.

சுண்ணாம்பிலும் பளிங்கிலும் உள்ள காபனேற் சேர்வைகள் முற்றிலும் வெப்பத்தால் பிரிவடைந்து பல அசௌகரியமான வாயுக்களை உருவாக்கி இந்தப் பூமியையே நரகமாக்கி விடுமாம்.

இப்போது இந்த நிலை வராவிட்டாலும் எப்போதோ ஒரு காலம் இக் கொடிய விளைவை பூமி சந்திக்கப் போவது நிஜம் அப்போதுதான் இன்றைய பூமியின் ''சொர்க்க நிலை'' விளங்கும்.

★ மாறுபடும் ரசனைகள்

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு உணவு முறை காணப்படுகிறது சில நாடுகளின் உணவுப் பழக்க வழக்கங்கள் வியப்பேற்படுத்தும் விதமாகக் காணப்படுகின்றன.

சீனாக்காரர்களுக்கு பாம்பு, பல்லி என்றால் கொண்டாட்டம் தானாம ஆபிரிக்காவில் உள்ள சையர் நாட்டவர்களுக்கு வாரம் ஒரு முறையாவது குரங்கு சூப் குடிக்காவிட்டால் வாழ்வு சோபிக்காதாம். தெற்கு நைஜீரியா மக்களிற்கு மசாலா போட்ட மணக்கும் நாயக்கறி என்றால்த்தான் மகிழ்ச்சி அடைவார்களாம். இதைப் பார்க்கும்போது ஒவ்வொரு நாக்கிலும் ஒவ்வொரு சுவை இருக்கும் உணவிலே ரகமிருக்கும் என்று பாடவருகிறதா?

-அவதானி-

மனைவியைக் கடித்துக் குதறிய கொடிய கணவன்

சந்தேகம் காரணமாம்

(லண்டன்)

மனைவியின்மீது சந்தேகம் கொண்ட கணவன் மனைவியை கண்டபாட்டில் கடித்து துன்புறுத்திய சம்பவம் ஒன்று அமெரிக்காவின் நியூ ஜெர்சி நகரில் நடந்துள்ளது.

சாய்மடி(வயது- 26)என்பவரே தனது மனைவி மீது கொண்ட சந்தேகம் காரணமாக அவரை அறையினுள் பூட்டி வைத்து கடித்ததில் அவரது உடலில் முப்பது காயங்கள் காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு வாரகாலம் கணவனால் பட்டினி போடப்பட்டதால் நடக்கக் கூட சக்தி அற்ற நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இப் பெண் உயிர் தப்பியது அதிசயம் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

மத்திய கிழக்கில் சமாதான முயற்சி

ஐ.நா. செயலர் அனான் பாராட்டு

(ஜெருசலேம்)

மத்திய கிழக்குப் பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதி முயற்சிகள் தனக்கு

போதிய திருப்தி தந்துள்ளதாகக் கூறிய ஐ.நா. செயலர் கோபி அனான மத்திய கிழக்கிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்துள்ளார்.

விஜயத்தின் முடிவில் ஜெருசலேமநகரில் ஆற்றிய உரையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

அமைதிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு கால அட்டவணை ஒன்று வரையப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளதுடன்,

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதில் அமெரிக்கா, ஐ.நா மன்றம், ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா ஆகியதரப்புக்கள் ஆற்ற வேண்டிய பங்கு குறித்தும் விளக்கிக் கூறியுள்ளார்.

அத்துடன், கடந்த 9 மாதங்களாக மத்திய கிழக்கில் தொடர்ந்த வன்முறைகளுடன் ஒப்பிடும் போது தற்போது ஏற்பட்டுள்ள அமைதி பாராட்டத் தக்கது எனவும், இந்நிலையை நீடிக்க வகை செய்ய வேண்டும் எனவும் இரு தரப்பையும் கோரியுள்ளார். (உ-9)

பல்கேரிய தேர்தலில் சைமனின் கட்சி

வெற்றி

பல்கேரியா நாட்டு மக்கள் அவர்களுடைய முன்னாள் மன்னரான இரண்டாம் சைமனை மீண்டும் வெற்றி பெறச் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பல்கேரியாத் தேர்தலில் இரண்டாம் சைமனின் கட்சி அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி ஈட்டியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. (உ-9)

இஸ்ரேல்-பலஸ்தீன

யுத்தநிறுத்தம் குறித்து அரபு நாடுகள் பேச்சு

(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையிலான யுத்தநிறுத்தத்தை அமுல் செய்வது தொடர்பான வழிவகைகள் பற்றி ஆராய 8 அரபு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் பலஸ்தீன அதிகார சபையும் இணைந்து நேற்று பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தியுள்ளன.

ஒன்பது மாத காலமாக தொடர்ந்து கொண்டிருக்கும் இஸ்ரேலிய-பலஸ்தீன வன்முறைகளுக்கு முடிவு கட்டும் பல தீர்மானங்கள் நேற்றைய கலந்துரையாடலில் எடுக்கப்பட்டுள்ளதாக கறிவிக்கப்பட்டுள்ளது;

அதத்துடன், இருதரப்பினரும் அரசியல் நடவடிக்கையுதுளில் மாற்றம் கொண்டுவர உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் மத்திய ஸ்தத்துவான இஸ்ரேல்-பலஸ்தீன சமாதானமுயற்சிகளை அடுத்துஅப்பகுதிகளில் இடம்பெறும் வன்முறைகள் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

மணிப்பூரில் வேலை நிறுத்தம்

அரச உடைமைகளும் சேதமாகின

(புதுடில்லி)

இந்தியாவின் வடகிழக்குப் பகுதி மணிப்பூர் மாநிலத்தில் மூன்றாவது நாளாக நேற்றும் வேலை நிறுத்தப் போராட்டங்கள் தொடர்ந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் அரச சார்பானவர்களின் கொடும் பாவிகளை எரித்துள்ளனர்;

அரச வாகனங்கள் மற்றும் கட்டடங்கள் மீதுகற்கள் வீசப்பட்டதாகவும் ஆங்காங்கே தீ மூட்டிய சம்பவங்கள் இடம் பெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த ஆர்ப்பாட்டத்தினை அடுத்து அப்பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மணிப்பூரின் அயல் மாநிலமான நாகலாந்தில் நடுவண் அரசிற்கும் கிளர்ச்சிக்காரர்களிற்கும் இடையே போர் நிறுத்தம்விரிவாக்கப்படுவதை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றமை தெரிந்ததே.

இந்த எதிர்ப்புநடவடிக்கைகளில் மகளிர் அமைப்புக்கள் தொடக்கம் மாணவர் அமைப்புக்கள் வரையான 80 அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்மை குறிப்பிடத்தக்கது. (உ-9)

இந்தியாவுடன் உறவு ஏற்படுத்த வேண்டாம்

பாக். அமெரிக்காவிடம் வேண்டுகோள்

(வாஷிங்டன்)

இந்தியாவுடன் உறவுகளை ஏற்படுத்துவதில் அக்கறை கொள்ள வேண்டாம் என்று அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல் சத்தார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, வாஷிங்டனில செய்தியாளரிடம்பேசிய, அமெரிக்காவின் பாகிஸ்தானியத தூதுவர் திருமதி லோதி காஷ்மீர் பிரச்சினை குறித்து நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் அமெரிக்காவும் பங்குகொள்ளவேண்டுமெனக் கோரியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இந்திய அரசின் நம்பகமற்ற தன்மை குறித்து அமெரிக்கப் பத்திரிகையாளருக்கு பாகிஸ்தான் தூதுவர் மேலும் எடுத்துக் கூறியதாகவும் தெரிய வருகிறது. (உ-9)

செய்திப்பரல்

★ அமெரிக்காவில் குடியேறுபவர்களுக்கு வழங்கப்படும் ''கிறீன் கார்ட'' நடைமுறைபிரிட்டனிலும் அமுல் படுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது

★ பாப்பரசர் ஜோன் போல, 4 இத்தாலியர்களையும் ஒருலெபனானியரையும் புனிதர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளார்.

★ சிலோ வாக்கியாவிலிருந்து செக் குடியரசினுள் நுழைய முயன்ற 35 இந்தியர்களை பொலிஸார்கைது செய்துள்ளனர்.

★ முன்னாள் இந்தோனேஷிய ஜனாதிபதி சுஹார்டோ நிரந்தர இருதய பேஸ் மேக்கர் சிகிச்சையை மேற்கொண்ட பின்பு வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார். (03)

குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளை கண்டறிய மக்களிடம் உதவி

(டாக்கா)

பங்களாதேஷில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிபபுடன் சம்பந்தப்பட்டவர்களை இனங்காண மக்கள் போதிஆதரவு வழங்க வேண்டுமென அந்நாட்டு அரசாங்கம் கோரியுள்ளது;

அண்மையில்பங்களாதேஷின் ஆளும் கட்சி அலுவலகத்தில் மேற் கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் மிகவும் கொடிய செயல் என வர்ணித்த பிரதமர் ஷேக்ஹசினா வகிட் இத்தாக்குதலின் சூத்திரதாரிகளைப் பிடிக்க நாட்டுமக்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்; (உ 9)

இஸ்ரேல்பிரதமர் மீது வழக்குத் தாக்கல்

மனிதாபிமானம் மறந்து செயற்பட்டாராம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் லெபனானை ஆக்கிரமித்தபோது மனிதகுலத்திற்கெதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்டதற்காக இஸ்ரேலியப்பிரதமர் ஏரியல் ஷரோன் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த ஆக்கிரமிப்பின் போது இடம்பெற்றபடுகொலைகளிலிருந்து உயிர் தப்பிய பெண்ணொருவரே இவர் மீது வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

இந்தப் பெண் இதுதொடர்பாக தனது வழக்கறிஞருடன் பெல்ஜியம் சென்றுள்ளார்;

ஆக்கிரமிப்பு நடந்த காலப் பகுதியில் ஷரோன் அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சராக இருந்ததனாலேயே அவர்மீது இதுதொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

புலன் விசாரணை அதிகாரிகள் வெளியேற்றம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் ''யூலிஸ்கோ'' என்ற நீர்மூழ்கிக் கப்பலின் மீது கடந்த ஒக்ரோபர் 12 ஆம் திகதி நடந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திவந்த அமெரிக்க கடற்படை மற்றும் மத்திய புலனாய்வுக் குழுக்கள் விசாரணையை இடைநிறுத்தி ஜேர்மனியை விட்டு வெளியேறியுள்ளனர்.

விசாரணை அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்தேஅவர்கள் தமது பணியை இடை நிறுத்தி ஜேர்மன் நாட்டிற்குஅருகில் உள்ள வேறொரு நாட்டிற்குச் சென்றுள்ளனர்.

இந்த அச்சுறுத்தல் தணிந்த பின் தமது பணியை மேற்கொள்ளுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தருஉம் பகை
குறள்

வலம்புரி

'கள்' பெற்ற பெருவாழ்வு

டாக்டர் மு. வரதராசனாரைப் பற்றி அறியாத தமிழ் உலகு இருக்க முடியாது தமிழ்த் துறையில் அநேக ஆய்வுகளை மேற்கொண்டவர், தமிழ் மொழியில் மட்டுமன்றி தமிழர்களின்குணஇயல்பு, கள் பற்றியும் சீர்தூக்கி ஆராய்ந்தவர். போட்டி, பொறாமை, காட்டிக் கொடுத்தல் இவையே தமிழர்களின் சாம்ராச்சியங்கள், அழிவதற்கும், தமிழினம்வேகமாகமுன்னேற்றமடையாததற்கும் அடிபடைக் காரணம் எனத் துணிந்து கூறியவர்.

அத்தகைய பெரியார் மு.வ அவர்கள் தமிழ் மொழியில் இடம் பெறும் பண்புடைச் சொல்லானகள் பற்றி ஆராய்ந்தார். சங்க காலத்தில் அஃறிணையுடன் இருந்த கள் பிற்காலத்திலேயே உயர்திணையுடன் சேர்ந்து கொண்டது.

என்ற தன் ஆய்வை கள் யெற்ற பெருவாழ்வுஎன்ற தலைப்பில் வெளிப்படுத்தினார்.

இன்று யாழ்ப்பாணத்தில் கள் பெற்றபெருவாழ்வு கண்டு அறிஞர்கள் குழாம் கதிகலங்கிப் போயுள்ளனர் பேனா பிடிக்கும் மாணவர்களின் கைகளில் இப்போது கள் பிளாக்களே இருக்கிறது. சங்ககாலத்தில் அஃறிணையோடு இருந்த அந்தக் கள் 21ம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் யாழ்ப்பாணத்து மாணவர்களுடன் பனங்கள் ஆகச் சேர்ந்து உயர்திணையான அவர்களை அஃறிணையாக்கி விட்டது. அதனால் கூத்தும், கும்மாளமும் வீதிகளில் மலிந்து விட்டன. சுற்றுலாக்களில் கள் பீப்பாக்கள் இளைஞர்கள் போய்ச்சேருவதற்கு முன்னதாகவேபோய்விடுகிறது

இக்காட்சியை வர்ணிப்பதற்கு டாக்டர் மு.வரதராசனார் இல்லையே என்ற கவலை ஒரு புறத்தில் இருந்தாலும் நம் யாழ்ப்பாணத்துமாணவர்களுடன் சேர்ந்த பனங்கள் பெருவாழ்வு பெற்றுவிட்டது. கள் பெற்ற பெருவாழ்வை விட பனங்கள் பெற்ற பெருவாழ்வுக்கு இனிக் குறைவே இல்லை.

மது மனிதனுக்குள் புகுந்து விட்டால், அதிலும் இளைஞர்களிடையே பழக்கமாகிவிட்டால் வீட்டில் இருக்கும் நிம்மதி மட்டுமல்ல அந்தச் சமூகம் கிராமம்,நகரம் ஏன்நாடே அல்லோல கல்லோலப்படும் என்பதே கண்ட முடிவு. அதற்கு அண்மையில் உலகையே உலுக்கிய நேபாளமன்னர் குடும்பப் படுகொலை சான்றாகும்

சமையல் அறையில் பிறந்தது சித்த மருத்துவம்

சுவைகளுக்கேற்ற மகிமைகளும் கொண்டது

டாக்டர்
எஸ். கோபாலகிருஷ்ணன்

மருத்துவ விளக்கம்

சித்த மருத்துவம் நமது அன்றாட வாழ்வோடும், ஒழுக்கத்தோடும், சமுதாயச் சடங்குகளோடு கூடிய உணவுப் பழக்க வழக்கங்களோடும் கலந்து ஒன்றாகிவிட்டது. சித்த மருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு "உணவு மருந்து மருந்தே உணவு' என்பதுதான். எனவே, சித்த மருத்துவம் தொடங்குவது நமது வீட்டின் சமயறையில்தான் சித்த மருத்துவத்தில்பத்திய உணவு என்ற பழக்கம் முக்கியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

சூழ்நிலைக்கேற்ற உணவுப் பழக்கம்

நமது சமையலறையில்தயாராகும் உணவுகளே. பருவகாலம், விசேஷ உணவு தயாரிப்புகள், பகல். இரவுகால உணவுகள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தான் வாழ்கின்ற இடம்,ஊர் இவற்றைச் சுற்றிலுமுள்ள இடங்களிலிருந்து கிடைக்கக் கூடிய தாவர, சங்கம மற்றும் கடல் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டே அந்தப் பகுதி மக்களின் உணவுப்பழக்கங்கள் அமைந்துள்ளன இதன் ஆதாரமாக நமது நூல்களில் கூறப்பட்ட ஐந்து வகை நிலங்கள் பாகுபாட்டுடன் குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய, அந்நிலங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை, உணவுப் பழக்க வழக்கங்கள் நமக்குத் தெளிவாகும். இப்படிப் பகுக்கப்பட்ட நிலங்களில் வாழ்ந்த மக்கள் தங்களின் சுற்றுப்புறச் சூழ் நிலைக்கேற்ப உணவுப் பழக்கங்களை அமைத்துக் கொண்டதல்லாமல், தங்களின் வாழ்க்கை முறையில் நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளையும் மேற்கொண்டிருந்தனர்.

நாகரிகம் மிகவும் வளர்ச்சி அடைந்த இந் நாட்களிலும் இந்த அடிப்படை விதிகள் இன்னமும் அறிந்ததோ அறியாமலோ கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதும் உண்மை. மேலும் உணவு என்பது மனிதர்கள் தொழில்போது துன்பம் ஏதும் இல்லை புரிவதற்கு வேண்டிய சக்தியைக்கொடுக்கவும், உடலை நிலைபெறச் செய்யவும், உடலை வளர்க்கவும் உதவுவதாகும். இதே மூன்று குணங்களையும் பெற்றிருக்கும் சத்துக்கள் உணவில் நிறைந்திருப்பதோடு, உண்ட உணவு சீரணமாகி உடலில் சேரக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

உணவு வேளை

நாம் உண்ணும் உணவையே, எந்த நேரத்தில்எந்த வகையான உணவுப் பொருட்களை உண்ண வேண்டும் என்ற நெறிமுறைகளையும் வகுத்துள்ளனர். உதாரணமாக சீரணிப்பதற்குக் கடுமையான புரோட்டீன் என்ற சத்துப் பொருட்களை அதிகமாகப் பெற்றிருக்கும் பருப்பு வகைகளை காலை வேளையிலும், காபோஹைட்ரேட் விற்றமின் என்ற சத்துப் பொருட்களை அதிகமாகப் பெற்றிருக்கும் அரிசி, தயிர், கிழங்கு, கீரை,பழம்இவற்றை மதிய வேளையிலும், எளிதில் செரித்து உடலில் பொருந்தக் கூடிய பசும் பால், இளங்காய் கறிகளைஇரவிலும்உண்ணும் படியாக வகுத்துள்ளனர்.

சுவையின் குணம்

'மகிமை குறையும், நோய் செய்யும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' போன்ற சான்றோர் வாக்கினால், எப் பொருளையும் அளவோடு மேற் கொள்ளும் மனிதர்கள் தொழில்போது துன்பம் ஏதும் இல்லை யென அறியலாம். ஒவ்வொரு சுவைக்கும்தனித்தனிக்குணங்கள் உண்டு என அறியப்பட்டுள்ளது. அவையாவன; துவர்ப்பு சுவை ஆற்றலைத் தரும்; கார்ப்புச் சுவை வீரத்தைத் தரும்: இனிப்பு சுவை; வளத்தைத் தரும்; உவர்ப்புச் சுவை; தெளிவைத் தரும்; கசப்புச் சுவை மென்மையைத் தரும்; புளிப்புச் சுவை: இனிமையைத் தந்து உடலை அழகுறச் செய்யும்; இச்சுவைகளின் அடிப்படையில் அமைகின்ற நமது உணவு நமதுவீட்டின் சமையலறையிலிருந்தே கிடைக்கின்றது. அந்தச் சமயலறையில்,சமையலுக்கு நாம் பயன்படுத்தும் பொருட்கள் எந்த அளவிற்கு நமதுஉடலை நிலைநிறுத்தவும்,நோய்அணுகாமல் நோயற்ற வாழ்வு வாழ பயன் படுகிறது என்பதையும் பார்க்கலாம்.

பொருட்களின் விசேஷ தன்மைகள் எவைஎன அறிவோம்.

மஞ்சள்;-

மஞ்சள் பொடியை நீரில் அல்லது சூடான பாலில் கரைத்து அருந்த, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, நீர்ச்சுருக்கு,இருமல்போகும்.

மிளகு:-

இதனால் உணவின் நச்சுத் தன்மை தீரும். உணவு நன்கு சீரணமாகும். பசி உண்டாகும். வாத, பித்த நோய்களைப் போக்கும்.

சீரகம்:-

உடலுக்கு வலுவைத்தந்து, கண்ணுக்குக் குளிர்ச்சி உண்டாக்கும். பித்த நோயைத் தணிக்கும்.

வெந்தயம்;-

வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், உட்சூடு, வெள்ளை, சீதக்கழிச்சல் போகும்.

கடுகு;-

தலைச்சுற்றுதல், விக்கல், வயிற்று வலி போக்கும்.

கொத்தமல்லிவிதை:-

உட்சூடு,நளிர்சுரம்,வாந்தி, விக்கல்.

நாவறட்சி:-

தலைசுற்றல் நீங்கும்.

இலைவகை:-

பித்தமயக்கம் நீங்கி உடலுக்குக் குளிர்ச்சி தரும்.

ஏலம்:-

வயிற்றுவலி, குன்மம் போக்கி, பித்தமயக்கம், செரியாமையைக் குணப்படுத்தும்.

கிராம்பு:-

மயக்கம், வாந்தி பேதி, நாட்பட்ட கழிச்சல், குருதிக் கழிச்சல் போக்கும், பல்ஈறு பலப்படும்.

பட்டை;-

உடலுக்கு குளிர்ச்சி உண்டாக்கி, உள் மூலம்,வயிற்றுக் கடுப்பு போக்கும்.

ஓமம்:-

செமியாக் கழிச்சல், வயிற்றுப் பொருமல் நீக்கும்.

கல்லீரல், மண்ணீரல் நோய் மற்றும்கல்லடைப்பைப்போக்கும்.

கசகசா:-

குடல் புழு, குருதிக் கழிச்சல், சீதக்கழிச்சல், தூக்கமின்மை நீங்கும்.

சாதிலை பத்திரி:-

உடற் கட்டுகளை வலுக்கச் செய்யும்,நிணபேதி, நீர்கழிச்சல் போக்கும்.

உயர்தரபாடங்களை ஆங்கிலத்தில் போதிப்பதற்கு

தமிழ் மொழியின் வறுமை காரணமாகுமா?

சர்ச்சையைக் கிளப்புகிறார் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதயாளன்

நாவாந்துறை றோ. க. த. க. வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில்'கலந்து கொண்ட யாழ். வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.சி. ஸ்ரீதயாளனின் கருத்துக்கள் இங்கு தொகுத்து தரப்படுகிறது. (ஆ ர்)

நம் தாய் மொழியாம் தமிழ் மொழி தொன்மையானது மட்டுமல்ல, வண்மை,இனிமை, செழுமை முதலிய பண்புகளால் மற்ற மொழிகளில் எல்லாம் முதன்மையாய் விளங்குவது என்ற வகையிலே நாம் பெருமைப் படுகிறோம்;

முத்தமிழோடு நான்காம், ஐந்தாம் தமிழ்களென அறிவியற்றமிழையும் கணனித் தமிழையும் இணைத்து உலகோடு இயைந்து வாழத் தெரிந்தும் விட்டோம்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்மொழி- நம் தாய்மொழிகல்விப்போதனை மொழியாகிவளரும்எம்மொழி அந்நியராட்சியிலிருந்து விடுபட்ட காலத்திலும் ஆங்கில மொழிப்பாடசாலை,தமிழ்ப் பாடசாலை என்ற வகுப்பு இருந்த போதும்,தமிழ்ப்பற்றுடைய அரசியலாளர்கள், கல்விமான்கள்,தேசியத்தலைவர்களின் பெருங்குரலால் சிங்களவருக்கு சிங்களமும், தமிழருக்கு தாய்மொழிதமிழுமாய் போதனா மொழிகள் பாடசாலைகளில்1964 களிலிருந்து நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழிலேயே கல்வி

அக்காலம் முதல் விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல்,தொழில்நுட்பம்போன்ற கல்வித்துறைகள் கூட தமிழிலேயே படித்துதமிழிலேயே விடையெழுதி மாணவர் சித்தியடைந்தும் வந்துள்ளனர். இத்தனைக்கும் தமிழில் தரமான,விஞ்ஞான அறிவியல் நூல்கள் தமிழ் நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி பொருத்தமாக தாராளமாக வெளிவந்து உதவின என்று சொல்வதற்கில்லை;

இந்நிலையில் ஆங்கிலத்தில் கற்ற கல்விமான்கள் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலிலும்,பின்னர் தமிழிலேயே அறிவியல் கற்றவர்களின் உதவியாலும் விஞ்ஞானக் கல்வி முன்னெடுக்கப்பட்டது;

சர்வதேச மொழி

இத்தனைக்கும் சர்வதேச மொழி ஆங்கிலத்தின் தேவை அவசியமானதுதான்.

தமிழில் போதிய நூல்கள் இல்லை.ஆய்வுகள், சஞ்சிகைகள் இல்லை. வெளிநாட்டுக் கல்வி வாய்ப்பிற்கு வசதியில்லை.மற்ற நாடுகளின்அறிவுத்தரத்தோடு போட்டியிட தகைமைஏது என்ற காரணங்களைக் காட்டி போதனை முறையில் சுதேசியமில்லாத ஆங்கிலத்தை மீண்டும் கொணர்ந்து தமிழ்ப் பாட போதனை முறைமையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவது போல விஞ்ஞான பாடங்களை ஆங்கிலமொழி மூலம் போதிக்கும் முறைமை ஆரம்பமாகி விட்டது.

எமது பிரதேசத்திலும் இது தொடர்பான கணிப்பீடுகள் பாடசாலைகளில்பெறப்பட்டு வருகின்றன;

ஆங்கில முக்கியத்துவம்

ஆங்கில மொழி மூலம் விஞ்ஞான பரடங்களை கற்பிக்க விரும்புபவர்கள் தகுதி உடையவர்கள்.சிறிய வகுப்புகளில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக கற்பிக்கக் கூடியவர்கள் என்று ஒரு படையணியினரையே திரட்டும் பணியில் அமைச்சு வர்த்த மானி அறிவித்தல்களையும் விடுத்ததுடன் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இவ்வேளையில், தமிழ்ப்பற்றுடைய சான்றோர்கள் நம் தாய் மொழியினுடையதகைமையை, இயலாமையை நினைத்துப் பார்க்கவேண்டும்.

மீண்டும் பாட போதனை மொழியில் மாற்றம் எதிர்க்கப்படவேண்டிய ஒன்றுஎன்று கூற வரவில்லை.

ஆனால் நம் தாய்மொழியானதமிழ் இவ்வளவுவறுமையானதாக,ஆற்றல் இல்லாத மொழியாக இருந்து வருகிறாதா என்று சிந்திக்கக்கடமைப் பட்டுள்ளோம்;

மொழி பெயர்ப்புக்களை சரியாகச் செய்யக் கூடியவர்கள் இல்லை. விஞ்ஞான தொழில் நுட்பங்களை,புதிய

(3ம் பக்கம் பார்க்க)

ஈழ மக்கள் விடுதலை உணர்வை தட்டி எழுப்பிய தோழர் பத்மநாபா

அவரின் நினைவையொட்டி ஈ.பி.ஆர்.எல்எவ். அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் காலஞ்சென்ற தலைவர்களில் ஒருவரான தோழர் பி. ராமமூர்த்தியுடன் சென்று அன்னை இந்திரா காந்தியைச் சந்தித்து ஈழத்தமிழர் பிரச்சினைகளை எடுத்துரைத்ததல் இளந்தலைமுறைத் முலைவர்தோழர்பத்மநாபா.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் தோழர் பத்மநாபா படுகொலை செய்யப்பட்டு 11 வது ஆண்டு நினைவை ஒட்டி வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்;

இந்திய இலங்கை முற்போக்கு இடதுசாரி அரசியல் தலைவர்கள் மற்றும் இளந்தலைமுறையினர் மத்தியில் அன்புக்குரியவராகவும் மரியாதைக்குரியவராகவும் போற்றப்பட்டார்;

ஈழத்தின் எல்லா மாவட்டங்களிலும் இளைஞர்கள் மத்தியில் ஒடுக்கப்பட்ட மக்கள்மீதும் ஈழ மக்களின் விடுதலை மீதும் ஈடுபாட்டைத் தட்டியெழுப்பிய இவர் ஒரு சரித்திரமாகவே வாழ்ந்தார். அவரது மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவுஎன்றால் அது மிகையல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது; (உ)

புலிச்சாயம் பூசப்பட்டதால் எனது உயிருக்கு ஆபத்து டாக்டர்ஜெயலத்தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்பு இருப்பதாக அரச ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருப்பதால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா நேற்றுபாராளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்: தான் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்று அரசுகருதினால் அரசு ஏன்தன்னைக் கைதுசெய்யவில்லையென்றும்கேள்விஎழுப்பிய அவர் அரசசார்புடைய சகல ஊடகங்களின் தலைவர்களும் பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவின் முன்னிலையில்விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்று சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவைக் கேட்டுக்கொண்டார்;

இதனை அடுத்து சபாநாயகர் இது தொடர்பான விளக்கங்களைத் தருமாறு அரசசார்பு ஊடகங்களின் தலைவர்களிடம் கேட்டுக்கொண்டார்; (ம)

ஜானகபெரேராவை தூதுவராக ஏற்க அவுஸ்ரேலியா தயார்

(சிட்னி)

அவுஸ்ரேலியாவுக்கான இலங்கைத்தூதுவராகஜானக பெரேராவை தாம்ஏற்கத் தயாரென்று அவுஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் அலெக் சாண்டர்டவுணர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதியாக பதவிவகித்த காலத்தில் ஜானகபெரேரா மீதுமனித உரிமைமீறல் குற்றச்சாட்டுக்கள் உள்ளமை குறித்து ஆராய்ந்ததில் அவர்மீது எவ்வித குற்றச்சாட்டுகளும் தாம் அறிந்தவரை இல்லாதிருப்பதால் அவரை தூதுவராக ஏற்க அவுஸ்ரேலிய அரசுதயாராகஉள்ளதென்று டவுணர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

காத்தான்குடி

வையும் சேர்த்துக் கொள்ளுமாறு வலியுறுத் திஹர்தால் அனுஷ்டிக்கப்பட்டது;

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின மத்திய குழுவின் ஏற்பாட்டில இடம் பெற்ற இக் ஹர்த்தாலினால். வர்த்தக நிலையங்கள யாவும் மூடப்பட்டிருந்தன. அலுவலகங்கள் பாடசாலைகள் இயங்கவில்லை. போக்குவரத்து யாவும் ஸ்தம்பிதமடைந்தும் நகரம் வெறிச்சோடிக்காணப்பட்டது. (இ)

தொழிலாளர்

சி.வே.குலநாயகம் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்;

நேற்றைய தினம் ஐக்கிய இலங்கைஸ்தல ஸ்தாபன தொழிற் சங்கப்பிரதிநிதிகளுடன் இவர்கள் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து வேலை நிறுத்தம் நேற்றுடன் கைவிடப்பட்டது.

வழமை போல் இன்று சுத்திகரிபபுப் பணிகள் இடம பெறும். (ந)

(ஏற்கனவே வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

நயினாதீவுக்கு பஸ்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவுக்கு நேற்று பஸ் ஒன்று கடற்படையினரின் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ் பஸ் சேவை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்; (ந)

சுகாதார வாரம்

உரும்பிராய்இந்துக்கல்லூரியில் இன்றும் நாளையும் சுகாதாரவாரமும், கண்காட்சியும் சிறப்பாகநடைபெறவுள்ளது.

கல்லூரிமுதல்வர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார சேவைகள் மாகாணப்பிரதிப் பணிப்பாளர் டாக்டர் (செல்வி) உமா சிவபாதசுந்தரமும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் சுகாதாரவைத்தியஅதிகாரி டாக்டர் செ இந்திரராஜாவும்கௌரவவிருந்தினராக கோப்பாய்கோட்டக் கல்வி அதிகாரி இ சிவஞானசுந்தரமும் கலந்துகொளவர். [ந]

ஐ.தே.கட்சி

கருத்துக்களைவெற்றிகொண்டும்நம்பிக்கையில்லாத்தீர்மானங்களை முறியடிக்கும் வகையில் புதிய வியூகத்தை அமைப்பதற்காக பொ.ஜ.ஐ முன்னணியின் மத்திய குழு இன்று ஜனாதிபதி தலைமையில்கூடுகிறது.

ஜானகபெரேரா--

டுள்ள ஜானகப் பெரேராவை அவுஸ்ரேலியஅரசாங்கம்இலங்கைத் தூதுவராகஏற்கக்கூடாதெனக்கோரிசுமார் 400ற்கும் மேற்பட்டவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிட்னி மெல்போன் மற்றும் ஹன்பரா ஆகிய நகரங்களிலிருந்து திரண்ட சுமார் 400ற்கும் மேற்பட்ட தமிழர்கள் அவுஸ்ரேலியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் ஒன்றுகூடி அங்கிருந்து பேரணியாகப்புறப்பட்டு அவுஸ்ரேலியப்பாராளுமன்றக்கட்டிடம் வரை அமைதி ஊர்வலமொன்றையும் நடத்தி யுள்ளனர்;

அவுஸ்ரேலிய தமிழ் அமைப்புக்களின் சம்மேளனத்தின்ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டம் தொடர்பாக, அதன் தலைவர்குண பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்:

மனித உரிமை மீறல்களின் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஜானக பெரேரா யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல் போனதற்கு காரண மானவர் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை சர்வதேச மன்னிப்புச் சபையும் ஜானகப் பெரேராவை தூதுவராக நியமித்ததை கண்டித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது; (இ)

இக்கூட்டத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானங்களைமுறியிடிக்கும் வகையில் தமிழ்க் யட்சிப் பாராளு மன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டக் கூடிய வகையில், புலிகளுடன் பேசுவதற்கு முட்டுக்கட்டையாக உள்ள 'புலிகள் மீதான தடை நீக்கம்' தொடர்பாகவும் இம் மத்தியகுழுக்கூட்டத்தில்ஆராயப்படவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் அரசில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி. இ.தொ.க, முஸ்லிம் காங்கிரஸ்,மக்கள் ஐக்கியமுன்னணி, கம்யூனிஸ்ட்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி உட்பட சகல அரசியல் கட்சித்தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம்வகிக்கும் 11 எம்பிக்களை கொண்ட முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ஹக்கீம் ஜனாதிபதி சந்திரிகா மீது ஆத்திரம் கொண்டுள்ளதால் பொ.ஐ. முன்னணிக்கு ஆட்சி செய்யும் தார்மீக உரிமை இல்லை என்றும் சூழுரைத்துள்ளார்;

ரணில்: ஹக்கீம் சந்திப்பு?

இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும் அமைச்சர் ஹக்கீம் சந்தித்துப் பேசியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டபோதும் அப்பேச்சுக்களின் போது முடிவுகள் எதுவும்எட்டப்படவில்லை என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

இப்போதைய சூழ்நிலையில்அரசுக்கெதிராகக் கொண்டுவரப்படவுள்ள சகல நம்பிக்கைஇல்லாத் தீர்மானங்களுக்கும் ஆதரவாக தமிழ் விடுதலைக்கூட்டணி ரெலோ தமிழ் க்காங்கிரஸ் ஆகியவற்றின் எம்பிக்கள் வாக்களிப்பார்காள்எனஎதிர்பார்க்கப்பட்டாலும் இன்று கூடும் பொ.ஜ.ஐமுன்னணியின் மத்திய குழு எடுக்கும் தீர்மானங்களைப் பொறுத்தே அவர்களின் முடிவு அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது; (வ)

தமிழ்

கியதாக லண்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்;

வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நால்வரில் இருவர் சிகிச்சைபெற்று திரும்பியுள்ளதாகவும், மற்றைய இருவரின் நிலை ஆபத்தாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

சர்வமதக்குழு . . .

முயற்சியில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டின் அரசியல்நிலை,மக்களின் மனோநிலை,மற்றும்பல்வேறுபட்ட பிரச்சினைகளை இக் குழுவினர் ஆராயவுள்ளனர்.

நேற்று யாழ். வந்த சர்வமதக் குழுவினர் யாழ். ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம், சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான தூதுக்குழுவினர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். (வ]

முஸ்லிம்களின்

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசு, முஸ்லிம்காங்கிரசிற்கு மூன்று அமைச்சுக்களை வழங்கியுள்ளது. இதனை சரிவரப்பயன்படுத்தி முஸ்லிம்மக்களுக்கும் அவர்களது பிரதேசத்திற்கும் நாட்டுக்கும்சேவையாற்றுவதைவிடுத்து தேவையில்லாதபிரச்சினைகளில் ஈடுபடுவதை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் பௌசி தெரிவித்தார். (இ)

புலிகளின் தலைவர் "பிரபாவை" உள்ளடக்காத குடிசன மதிப்பீடு உண்மையான கணிப்பீடாகுமா?

ஐ.தே.கட்சியின் அஸ்வர் எம்.பி. ஜனாதிபதியிடம் கேள்வி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையும் அவரது போராளிகளையும் சேர்த்துக் கொள்ளாமல், மேற்கொள்ளப்படும் சனத்தொகைக் கணிப்பீடு உண்மையான சனத்தொகையைப் பிரதிபலிக்குமா, என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம், ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எச். எம். அஸ்வர் கேள்வி எழுப்பியுள்ளார்;

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்கள், தொடரும் யுத்தத்தினால் அமைதியற்றும், இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகவும் அல்லற்படுகின்றனர்;

இந்நிலையில் அப்பகுதிகளில் சனத்தொகைக் கணிப்பீட்டை மேற்கொள்வது சிறுபான்மை மக்களை மோசமாகப் பாதிக்கும்.

இக்குடிசன மதிப்பீடு சிறுபான்மை மக்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்ட, அரசாங்கம் மேற்கொள்ளும் சதியென்றும் அஸ்வர்மேலும் தெரிவித்துள்ளார். (இ)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
அர்ஜுன், அபிதா
பிரகாஷ்ராஜ்
நடித்த
வானவில்
தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30[பு. நே]
(3222)

மங்கையர் மனம் மயங்கும் தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
மகாநதி ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி, [கி-2040] யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு மே மாதம் 19 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.